**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 4205/ஆ5/2023, நாள்.09.10.2023**

.....

பொருள் பள்ளிக் கல்வி – அறிவியல் மன்ற செயல்பாடுகள் – "ஒளிரும் தமிழ்நாடு மிளிரும் தமிழர்கள் " – தமிழ்நாடு விண்வெளி வீரர்களுக்கான பாராட்டு விழா நிகழ்வு கள் – மாணவர்களுக்கு காட்சிப்படுத்துதல் – அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக

பார்வை சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.050188/பகஇ(நேமுஉ)/2023, நாள். 05.10.2023 (இவ்வலுவலகம் பெறப்பட்ட நாள். 09.10.2023)

.....

பார்வையில் கா ணும் கடிதத்தில் 2021–2024ம் கல்வியாண்டின் அறிவியல் மன்ற செயல்பாடுகளின் ஒரு பகுதியாக அனைத்து அரசு / அரசு உதவிபெறும் தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளிலும் தமிழ்நாடு அரசின் "ஒளிரும் தமிழ்நாடு மிளிரும் தமிழர்கள்" – விண்வெளி வீரர்களுக்கான பாராட்சு விழாவினை அனைத்து வகை பள்ளி மாணவர்களும் கண்டு களித்திடும் வகையில் திரையிட அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுரை வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்நிகழ்வில் உள்ளூர் அறிவியல் அறிஞர்கள் , கல்லூரி பேராசியர்கள் மூலம் இந்திய விண்வெளி ஆய்வுகள் மற்றும் விண்வெளி சாதனைகளில் தமிழர்களின் பங்கு குறித்து உரைநிகழ்த்திடவும், மாணவர்களிடம் இந்நிகழ்வு குறித்து அறிவியல் மனப்பான்மையை வளர்க்கும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அக்டோர் மாதத்திற்கான அறிவியல் மன்ற செயல்பாடுகளை "சந்திராயன் – 3 திட்டமும் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் (ISRO) சாதனைகளும்" என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு திட்டமிட்டு நடத்த கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அரசு / அரசு உதவி பெறும் பெறும் தொடக்கப் பள்ளிகள் எதிர்வரும் 09.10.2023 அன்று தொடங்கப்படவுள்ள நிலையில் 10.10.2023 அன்று அனைத்து வகைப் பள்ளிகளுக்கும் இந்நிகழ்வினை திட்டமிட்டு திரையிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தேவைப்படும் பள்ளிகளில் LCD Projector / Smart TV ஆகியவற்றை பள்ளி மேலாண்மைக் குழு மூலம் வாடகைக்குப் பெற்று பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன் , அனைத்து வகை தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளிலும் "ஒளிரும் தமிழ்நாடு மிளிரும் தமிழர்கள் " நிகழ்வு திரையிடப்பட்டதை ஆவணப் படுத்தி, நிகழ்வு தொடர்பான அறிக்கையினை 10.10.2023 மாலை 5.00 மணிக்குள் desjdnss@gmail.com மற்றும் velloreceo@gmail.com என்ற மின்னஞ்சல் முவரிக்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து வகை தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

அரசின் "ஒளிரும் தமிழ்நாடு மிளிரும் தமிழர்கள்" நிகழ்வின் காணொலி இணைப்பு

https://www.youtube.com/live/nJJ554WXK80?feature=share

//ஒப்பம்//

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –

1. தலைமையாசிரியர்கள்,
   அனைத்து வகை தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்,
   வேலூர் மாவட்டம்.

நகல் –

1. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக் கல்வி / தொடக்கக் கல்வி )
   வேலூர் மாவட்டம்.
   (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு
   இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)